**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.626/2025
Sessions)

( Prosecution P.W.3
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | மலர்க்கொடி | -- | |
| Husband's Name | ஜெயராஜ் | Calling | கூலி |
| Village | வேட்டரம்பட்டி | Religion | |
| Taluk | தென்காசி | Age | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accused present.

**முதல் விசாரணை**

நான் தென்காசி மாவட்டம், வேட்டரம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் ஜெயராஜ் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது மகன் கருப்பசாமி தங்கப்பழம் பாலிடெக்னிக் கல்லூரியில் 3ம் ஆண்டு படிக்கிறான். அ.சா.1 கலைச்செல்வி என் உடன் பிறந்த தங்கை ஆவார். மேலும், தீபா என்கிற தங்கையும் எனக்கு உள்ளார். என் அப்பா மாரியப்பன் முகவூரில் தங்கியிருந்து தளவாய்புரத்தில் வேலை பார்க்கிறார். எனது அம்மா என்னுடைய ஊரில் குடியிருந்து வந்தார். வாரம் ஒரு முறை எனது அம்மாவை பார்ப்பதற்காக வந்து செல்வார். 04.05.2024ம் தேதி என்னைத் தவிர எங்களது குடும்பத்தினர்கள் மம்சாபுரத்தில் உள்ள கோவிலுக்குச் சென்று வந்தார்கள். மறுநாள் எனது அப்பாவுடன் வேலை பார்க்கும் தங்கராஜ் என்பவர் எனது தங்கை கலைச்செல்வி என்பவரிடம் போன் மூலமாக எனது அப்பா மாரியப்பன் புதுப்பட்டி விலக்கில் ரோட்டைக் கடப்பதற்காக நடந்து சென்ற போது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். மேற்படி விபரத்தை எனது தங்கை என்னிடம் கூறினார். அதன் பின்னர் பஸ் மூலம் நாங்கள் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து என் அப்பாவை பார்த்தோம். என் அப்பாவிற்கு மண்டையில் அடிபட்டிருந்தது. காதில் இரத்தம் வந்தது. பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரைக்கு அனுப்பிவைத்தார்கள். நானும் அங்கு சென்றேன். மருத்துவர் எனது அப்பாவை பரிசோதித்து விட்டு அவர் இறந்துபோய் விட்டதாக தெரிவித்தார். இது சம்மந்தமாக போலிசாரிடம் எனது தங்கை புகார் கொடுத்தார். எனது தந்தையின் மீது மோதிய அரசுப் பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் முருகன் என்று தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. என் அப்பாவின் இறப்பிற்கு இழப்பீடு கேட்டு வழக்கு போட்டுள்ளோம். இறந்து போனவர் என் அப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.19 11:48:39 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**